மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

கம்பராமாயணத்தில் கதாப்பாத்திரங்களின் குண இயல்புகள் - மிதிலை காட்சிப் படலத்தை அடிப்படையாகக் கொண்ட பார்வை

The Characteristics of the Characters in Kamparamayana – A Perspective Based on the Mithila Visual Film

Suthakaran Vithursiya / சுதாகரன் விதுர்சியா

Coordinator, Batticaloa Regional Centre, The Open University of Sri Lanka.

Date of Submission: 10-12-2025
Date of Acceptance: 23-12-2025
Date of Publication: 25-12-2025
Corresponding Author's Email:
vithuu99@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய மரபில் சிறப்புமிக்க படைப்புக்களில் ஒன்றாக விளங்குவது கம்பராமாயணம் ஆகும். ஊலக இலக்கியங்களில் மனிதனின் நிறை குறை குணங்களையும் சித்தரித்துக் காட்டும் தன்மையாய் இது என்றும் புதுமை இழக்காத காவியமாக உள்ளது. கம்பர் தனது கவிநயம், மொழியின் இனிமை, உருவங்களின் ஆழம் ஆகியவற்றின் மூலம் இதனை ஒரு கலைக்கோவையாக உருவாக்கியுள்ளார். இந்தக் காவியத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் தனித்துவமான குணநலங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இராமனின் தர்மநிலை, சீதையின் தூய்மை, முனிவர்களின் தவவலிமை போன்ற வித்தியாசமான குணப்பண்புகள் மனித வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை பிரதிபலிக்கின்றன. ஒரே காவியத்துக்குள் உயர்ந்த தர்மமும் கீழ்த்தரமான ஆசைகளும் ஒன்றோடு ஒன்று நிழலாக நிற்பதையும் அவற்றின் விளைவுகளை உணர்த்துவதையும் கம்பராமாயணம் சிறப்பாகச் செய்கிறது. இந்த காவியத்தில் உள்ள மிதிலைக் காட்சிப் படலம் எனும் படலத்திலுள்ள கதாபாத்திரங்களின் குணப்பண்புகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: கதாபாத்திரங்கள், இராமன், சீதை, கம்பர், கம்பராமாயணம், காவியம்

Abstract

Kambaramayanam is one of the most important works in the Tamil literary tradition. It is an epic that never loses its originality in world literature, depicting the perfections and shortcomings of man. Kambar has created it as an artistic masterpiece through his poetic style, sweetness of language, and the beauty of images. Each character in this epic is created with unique qualities. Different qualities such as the morality of Rama, the purity of Sita, and the penance of the sages reflect various dimensions of human life. Kambaramayanam excels in showing that high morality and low desires stand as shadows of each other within a single epic and conveys their consequences. The purpose of this study is to examine the qualities of the characters in the film called Mithila Kashidha Patalam in this epic.

Keywords: Characters, Rama, Sita, Kambar, Kambaramayanam, Epic

அறிமுகம்

கம்பராமாயணம் எனும் நூலானது வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தை தழுவி எழுதப்பட்ட நூலாகும். இது ஒரு வழிநூலாக இருந்தாலும் கம்பர் தனக்கே உரித்தான பாணியில் தன் புலமையை வெளிக்காட்டியுள்ளார். கம்பராமாயணம் 6 காண்டங்களையும் 113 படலங்களையும் 10569 பாடல்களையும் கொண்டுள்ளது. அந்தவகையில் பாலகாண்டத்தில் காணப்படுகின்ற மிதிலைக் காட்சிப் படலத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு நோக்கப்படுகின்றது. சனக மன்னனுடைய நாடான விதேக நாட்டினுடைய தலைநகரான மிதிலையின் தோற்றத்தை இராம இலக்குவரும், விசுவாமித்திரரும் கண்ட வரலாறு கூறுவது இப்படலமாகும். இப்படலத்தினுள் மூவரும் மிதிலை நகருள் பல காட்சிகளைக் காணல் - சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்ளல் - இராமன் நினைவால் சீதை உற்ற துன்பநிலை – அம்மூவரும் சனகன் எதிர்கொள்ளச் செள;று மாளிகையில் தங்குதல் - இராமனுக'கு சதனாந்தர் விஸ்வாமித்திரர் வரலாறு கூறல் - கௌசிக முனிவர் தவம் செய்தல் - தேவர்கள் கௌசிகனை பிரம ரிசியாக்குதல் - சீதையின் உருவ வெளிப்பாடு கண்டு இராமன் கலங்குதல் - இராமன் முனிவரோடும் தம்பியரோடும் சனகனது வேள்விச்சாலையை அடைதல் - சனகன் விசுவாமித்திரனை வினவலும் அவர் விடையளித்தலும் ஆகியன அடங்குகின்றன.

கதாபாத்திரங்களின் குணப்பண்புகள்

கம்பராமாயணத்தில் பாத்திரங்களின் குணப்பண்புகளை ஆராய்கின்ற போது கம்பனின் காவியக் கட்டமைப்புத்திறன் புலனாகின்றது. இப்படலத்திலே ராமன், சீதை, விசுவாமித்திரர், சனானந்தன், வசிட்ட முனிவர், திரிசங்கு ஆகிய பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. கம்பராமாயணத்தில் உள்ள பாத்திரங்களை முதன்மைப் பாத்திரம், துணைப் பாத்திரம் என இரண்டாகப் பிரிக்கலாம். காவியத்தில தொடர்ந்து பங்கெடுக்கின்ற இராமன், சீதை ஆகிய பாத்திரங்கள் முதன்மைப் பாத்திரங்களாகும். முதன்மை பாத்திரங்களினுள்ளும் காப்பியத் தலைவன், முரண்நிலைப் பாத்திரங்கள் இரண்டு வகையான பாத்திரங்கள் இடம்பெறுகின்றன.

இராமன்

காப்பியத் தலைவன் இராமன் ஆவான். வைணவ அவதாரக்கோட்பாட்டின் அடிப்படையில் பரம்பொருள் மனிதனாக அவதரித்த கதையை காப்பியமாகப் பாடுவதால் இராமனை மனித நிலையிலும் தெய்வ நிலையிலும் காட்டியுள்ளார். அகலிகையின் சாபத்தை நீக்கியதிலிருந்து இராமனின் தெய்வத்தன்மை புலனாகிறது. சீதையைத் திருமகளின் வடிவம் என்று கூறும் கம்பர், அத்தகைய சீதையை மணம்புரிவதற்கு ஏற்ற ஆண்மகன் என இராமனை அறக்கடவுளே தூதுபோய் தெரிவிக்கின்றது. இதிலிருந்து ஓர் ஆண்மகனுக்கும், கணவனுக்கும் ஏற்ற குணப்பண்புள்ளவனாகக் காணப்படுகின்றான். இதனை பின்வரும் வரிகள் தெளிவுபடுத்துகின்றது.

"நிரம்பிய மாடத்து உம்பர்

நிரை மணிக் கொடிகள் எல்லாம்..." (481)

மேலும் பல இடங்களில் இராமனின் வீரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒலிக்கும் வீரக்கழல்கள் கட்டிய வீரன், மதம் பிடித்த யானையை அடக்கும் அளவிற்கு உறுதியான அங்குசம் மிக்கவன், குற்றமில்லாத வல்மையான வீரன் என பல்வேறு விதங்களில் இராமனின் வீரம் எடுத்தாளப்பட்டுள்ளன. இதற்கு பின்வரும் பாடல்வரிகள் சான்று பகர்கின்றன.

"வீக்கிய கணைக்கழல் வீரன்" (515)

"மத்த யானையின் நிறை என்னும் அங்குசம்" (519)

"தீது அறு மொய்கொள் வீரன்" (563)

மேலும் இராமனின் குணப்பண்புகள் விஸ்வாமித்திரர் என்னும் பாத்திரத்தின் வாயிலாகவும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இராமன் வேள்விக்கு தடங்கல் விளைவித்த தாடகை என்னும் அரக்கியை கொன்று வேள்வியைப் பாதுகாத்ததோடு, அகழிகையின் சாபத்தினை நீக்கினான். இதன்மூலம் இராமனின் வீரம் மட்டுமன்றி, அவனின் தெய்வத்தன்மை, தனக்கான கடமைகளை சரியாகச் நிறைவேற்றுதல், உதவி மனப்பாங்கு போன்ற பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

இதனை பின்வரும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

“வடித்த மாதவ கேட்டி இவ் வள்ளல்தான்

இடித்த வெங் குரல் தாடகை யாக்கையும்,

அடுத்து என் வேள்வியும், நின் அன்னை சாபமும்

முடித்து, என் நெஞ்சத்து இடர் முடித்தான் என்றாள்.”

அடுத்ததாக இராமன் சிறந்த வள்ளல் பண்பு நிநைந்த குணவாளன். இப்பண்பினையும் சில பாடல்கள் பதிவு செய்துள்ளன. ஓர் பாடலில் வரையாது அருள் செய்பவன் எனவும் மற்றுமொரு பாடலில் இராமனை வள்ளல்தான் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை பின்வரும் வரிகள் தெளிவுபடுத்துகின்றது.

“வந்து எதிர்த்த முனிவரை வள்ளலும்” (564)

“வடித்த மாதவ கேட்டி இவ்வள்ளல்தான்” (567)

சீதை

கற்பின் திறத்திற்கும் பதிபக்திக்கும் எடுத்துக்காட்டாகத் திகழும் சீதையை திருமகளுக்கு ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இதன் மூலமாக சீதையின் நற்பண்பு மற்றும் தெய்வத்தன்மையும் குறிப்பிடப்படுவதோடு, அடுத்த பாடலில் உமாதேவி போன்ற சிறப்புடைய மாதர்களும் தங்கள் தலைமேல் கைகளை வைத்து வணக்கம் செய்வதற்குரிய பொறுமை முதலிய நற்பண்புகளை உடையவள் எனவும் கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் வரிகள் தெளிவுபடுத்துகின்றது.

“அப்பெண்தானே ஆயின..” (503)

“உமையாள் ஒக்கும் மங்கையர்

உச்சிக் கரம் வைக்கும்

சுமையாள் மேனி கண்டவர்”

அத்தோடு சீதை பெண்களில் சிறந்தவள் எனவும், பெண்களுக்குரிய பண்புகளான நாணம் முதலிய நற்பண்புகள் பொருந்தப்பெற்றவள் சீதை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதனை பின்வரும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

“வாள் கண் நங்கை” (516)

“பிறை எனும் நுதலவன் பெண்மை என் படும்” (519)

சதானந்தன்

இவர் மற்றவர்களை மதிக்கும் குணப்பண்பும் ஏனையோரை ஆதரிக்கும் பழக்கமும் நிரம்பப் பெற்றவர் என்பதனை கௌசிக முனிவர் சதானந்தனை மிதிலைக்கு வரவேற்றபோது கூறிய உபசார மொழிகளிலிருந்து புலப்படுகின்றது. அத்தோடு அவர் வருவது மிதிலைநகர் பண்ணிய தவம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

“இப்போது நீ இவன் போத, இப் ஏதலம்

ஏது செய்த தவம்? என்று இயம்பினான்” (565)

மேலும் பெருந்தவங்கள் எல்லாம் சீலமாகிய உருவமாக விளங்கியதுடன் முனிவர்களின் தலைவர், பெரிய தவமுனிவர், எல்லையில்லர நற்பண்புகளை உடையவர் எனப் போற்றப்படுகிறார். இதனை பின்வரும் வரிகள் தெளிவுபடுத்துகின்றது.

“மாதவம் யாவும் ஓர் செய்கை கொண்டு...” (563)

“கோ முனி” (565)

“வடித்த மாதவ” (567)

“ஈறு இலான்” (616)

சதானந்தன் வேதம் ஓதுதல், நல்லொழுக்கங்களைப் பேணுதல், பெருந்தவமுடைமை, பிராமணர்களுக்கு தலைமை வகித்தல் போன்ற பண்புகளில் பிரமனுக்கு நிகரானவனாக உவமிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நூல் தோய்ந்த சிந்தனை உடையவனாகவும், அனைத்து கலைகளையும் முழுவதும் உணர்ந்தவராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார். பின்வரும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

“எந் தண் சேக்கைப் புனிதனையே பொரு

ஏய்த்த கோண்மைச் சதானந்தன் என்று....” (566)

வசிட்டர்

வசிட்டரின் விருந்தோம்பல் பண்பானது சில பாடல்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. ஓர் பாடலில் கௌசிக முனிவருக்கு அரிய உபசார கடமைகளை முறை தவறாமல் செய்து அவரை தங்கியிருந்து செல்க எனக் கூறினார். அதுமட்டுமன்றி காமதேனுவை அழைத்து விருந்திட்டான். இவை அவரது விருந்தோம்பல் பண்புக்கு சான்றாகும். இதனையே பின்வரும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

“அருந்ததி கணவன் வந்தற்கு

அருங் கடன் முறையின் ஆற்றி....” (572)

மற்றுமொரு பாடலில் சிறப்பித்து சொல்லப்படுகின்ற தவத்திலே மேம்பட்டவர் என்றும் யாவராலும் துதிக்கப்படுகின்றவர் என்றும் கூறப்பட்டுள்ளதனூடாக இவரது தவவலிமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை பின்வரும் வரிகள் தெளிவுபடுத்துகின்றது.

“உரைசெய் மா தவத்து ஓங்கல்....” (571)

மேலும் இவர் தரும நூல் முதலிய கலைகளையும் வேதங்களையும் அறிந்ததோடு வேதகலைகளை அறிய வல்லவர் என்பதனை பின்வரும் வரிகளினூடாக அறியலாம்.

“தீது அறு குணத்தால் மிக்க

செழு மறை தெரிந்த நூலோன்..” (574)

“கருதி நூல் உணர வல்ல...” (579)

அடுத்ததாக இவரின் தவவலிமையும் சில பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தன்னை அழிக்க வந்தவர்களையும் விசுவாமித்திரரின் புதல்வர்களையும் தீப்பொறி பறக்கும் கண்களால் விழித்துப் பார்த்து அழித்தார். அதுமட்டுமன்றி விசுவாமித்திரரின் அனைத்துப் படைகளையும் தன் சக்தியினால் உட்கொண்டார். மேலும் தன் சீடனான திரிசங்கு தன்னை விட்டு இன்னொரு குருவை தேடுவேன் என கூறியபோது ‘புலையனாய் ஆகி விடுவாய்’ என சபித்தார். இச் சம்பவங்களினூடாக அவரின் தவவலிமை, சீற்றம் மட்டுமன்றி தெய்வீகத் தன்மையும் வெளிப்படுத்தப்படுகிறது. இதனை பின்வரும் வரிகளினூடாக அறியலாம்.

“அடர்த்தனர் அடர அன்னான்

ஏரி என விழித்தோடும்

இறந்தனர் குமரர் எல்லாம்” (579)

“முனியும் தோன்றி, கிட்டிய படையை உண்டு கிளர்ந்தனன்” (582)

“நினக்கு ஒலாது ஆயின், ஐய!

நீள் நிலத்து யாவரேனும்..” (588)

விசுவாமித்திரர்

விசுவாமித்திரரின் வீரம் சதானந்த முனிவர், 'விசுவாமித்திரரின் கருணை இப்பொழுது இராம இலக்குவனனுக்கு இருப்பதால்தான் வெற்றி வீரர்களாகிய அவர்களால் செய்ய முடியாத அரும் செயல் ஒன்றுமில்லை' என கூறுவதிலிருந்து வெளிபடுத்தப்பட்டுள்ளது.

"என்று கோசிகன் கூறிட, ஈறு இலா

வன் தபோதனன் மா தவ! நின் அருள்.." (568)

மேலும் எல்லோரும் செல்வத்தை விரும்பி பாதுகாப்பது போல இவர் தவத்தை விரும்பி பாதுகாப்பதில் தபேதனன் சிறப்பிக்கப்படுகின்றார். அத்துடன் போரின்போது சிவபெருமானை வேண்டி உருத்திரப் படை ஒன்றைப் பெற்றார். இச்செயல்களிலிருந்து இவர் உலக இன்பங்களிலிருந்து விடுபட்ட தன்மை மற்றும் தவ வலிமை என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதனை கீழ்வரும் வரிகளினூடாக அறியலாம்.

"ஈறு இலா வன் தபோதனன்" (568)

"அன்னவன் அடல் உறு படை ஒன்று ஈய அகன்றான்" (581)

இவர் முன்பு அரசனாய் இருந்த காலத்தில் நிலவுலகத்திற்கு எல்லையில்லாத பல ஆண்டுகள் அளவும் அரசநீதிப்படி பாதுகாத்து உயிர்களிடம் கருணை நிரம்ப ஆட்சி செய்ததிலிருந்து இவரது சிறந்த ஆட்சித்திறன் வெளிப்படுகின்றது. இதனை கீழ்வரும் வரிகளினூடாக அறியலாம்.

"அவ் அருந்தவன் புவிக்கு இறையென ஈறு இல்

புல் ஆண்டு எலாம்" (570)

போரின்போது வசிட்டருடன் போரிட்டு தோல்வியுற்றதை எண்ணி வருந்தாமல் தானும் வசிட்டரைப் போல தவ வலிமை பெற வேண்டும் என கடும் தவம் புரிந்தார். இதிலிருந்து சோர்வடையாத மன தைரியம் வெளிப்படுத்தப்படுகின்றது. இதனை பின்வரும் வரிகள் தெளிவுபடுத்துகின்றது.

"கண்டனன் அரசன் காணா

குலைமறை முனிவர்க்கு அல்லாமல்..." (583)

முடிவுரை

கம்பராமாயணத்தின் மிதிலை காட்சிப் படலத்திலுள்ள கதாபாத்திரங்களின் குணப்பண்புகளை ஆராய்கின்ற போது மனிதநேயத்தின் உயரிய மதிப்புக்கள், தர்ம நெறி, வீரம், தைரியம் போன்றவை ஒவ்வொரு பாத்திரத்திலும் ஒளிரும் என்பதை உணரமுடிகிறது. இராமன் வழி என்னும் தர்மத்தின் வடிவம், சீதையின் பொறுமை, மனவலிமை எனும் பண்புகள், பெண்களின் உன்னத வடிவம் மற்றும் இவர்களின் உறுதியான செயல்திறன் ஆகியவை மனிதர்கள் பின்பற்றவேண்டிய உயரிய குணாதிசயங்களாகின்றன. அத்துடன் எதிர்மறைப் பாத்திரங்களினூடாக அகந்தை, கோபம், ஆசை போன்றவை எவ்வாறு வீழ்ச்சிக்கு காராணமாகின்றது என்பதையும் கம்பர் அழகாக வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு கம்பராமாயணம் வெறும் காவியமல்ல. மனித வாழ்க்கையை உயர்த்தும் நல்வழிகளையும் தவறுகளை உணர்த்தும் எச்சரிக்கைகளையும் தரும் ஓர் அறநெறிக் களஞ்சியம்.அதன் கதாப்பாத்திரங்கள் மூலம் மனிதன் எந்தக் குணப்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும், எவற்றை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதை காலந்தோறும் நினைவூட்டும் மரபு இலக்கியமாக திகழ்கின்றது.

உசாத்துணைகள்

சீனிவாசன்., ரா.(2000). கம்பராமாயணம். அணியகம் பதிப்பகம்.